- ஏப்ரல் 30: **சர்வதேச ஜாஸ் இசை நாள்**
- நாட்டிலேயே முதன்முறையாக **ஹைதராபாத் காவல்துறை** காகித பயன்பாடு முற்றிலும் ஒழிக்கப்பட்டு முழுக்க **கணினிமயமாக உள்ளது**.
- **ஏர்போர்ட் போல வசதிகள்** உள்ள ரயில் நிலையங்களின் வரிசையில் **சூரத்திற்கு 3வது** இடம்.ஏற்கனவே **மத்திய பிரதேசத்தின் ஹபீப்கஞ்ச்** மற்றும் குஜராத்தின் காந்திநகர் ரயில்நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது
- இந்திய ராணுவம் மற்றும் மலேசிய ராணுவம் இடையிலான **ஹரிமாவ் சக்தி** 2018 என்ற ராணுவப் பயிற்சி **ஏப்ரல் 30ம் தேதி கோலாலம்பூரில் உள்ள வார்டீபர்ன்** முகாமில் தொடங்கியது.
- மத்திய குடிநீர் மற்றும் நலவாழ்வுத் துறை அமைச்சர் செல்வி உமாபாரதி, **கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் கோபர்தான் திட்டத்தை** தொடங்கிவைத்தார்.
- **ரஷ்யாவிலுள்ள உரல் மலைப்** பகுதியில் செப்டம்பர் மாதம் தொடங்கவுள்ள பயங்கரவாத்துக்கு எதிராக பல்வேறு நாடுகள் பங்கேற்கும் கூட்டுப் பயிற்சியில் இந்தியாவும், பாகிஸ்தானும் பங்கேற்க உள்ளன . இந்த கூட்டுப் பயிற்சி **ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கீழ்** நடைபெறுகிறது..
- உலகின் மிக வயதான என்று அறியப்பட்ட **நம்பர் 16 என்ற சிலந்திப்பூச்சி** தனது 43-வயதில் ஆஸ்திரேலியாவில் இறந்தது.
- 2017-18 நிதியாண்டில் ஜெம் மற்றும் ஜுவல்லரி **ஏற்றுமதி 8% சரிவு**
- டெபோர்டிவோ அணிக்கெதிரான ஆட்டத்தில் மெஸ்சி ஹாட்ரிக் கோல் அடிக்க 25-வது முறையாக **பார்சிலோனா லா லிகா பட்டத்தை** வென்றுள்ளது
- **பார்சிலோனா ஓபன் டென்னிஸ்** தொடரின் இறுதி போட்டியில் **ஸ்பெயின் நாட்டு வீரர் ரஃபேல் நடால்** கிரீக் நாட்டை சேர்ந்த ஸ்டெபனோஸ் டிட்சிபாசை வென்று **சாம்பியன் பட்டம் வென்றார்**.
- **ஐஸ்லாந்தில் நடந்த உலக கோப்பை சாட்டிலைட் வாள்வீச்சு** பந்தயத்தில் **தமிழகத்தை சேர்ந்த பவானிதேவி** வெள்ளிப் பதக்கம் வென்றார்.